## உங்கள் குழந்தையை சோதனைக்கு தயார் செய்தல்

மதிப்பீட்டின் பொழுது உங்கள் குழந்தை தூங்கிக்கொண்டு அமைதியாக ஓய்வு எடுத்தால் பரிசோதனை முடிவுகளை ஆடியோலாஜிஸ்ட் மிக துல்லியமாக தருவார். நீங்கள் கீழ்கண்டவாறு உதவலாம்:

- பரிசோதனை சந்திப்புக்கு முன்பு சிலமணி நேரங்கள் உங்கள் கைக்குழந்தையை தூங்கவிடாமல் பார்த்துக்கொள்ளுதல்
- பரிசோதனை தொடங்குவதற்கு சிறிது முன்பு வரை காத்திருந்து அப்போது உங்கள் குழந்தைக்கு உணவு ஊட்டுதல்
- வசதியான சூடான ஒரு போர்வையை எடுத்து வருதல்
- கையில் அதிகப்படியாக டயாபர்கள் வைத்து இருத்தல், ஒரு வேளை தேவைப்பட்டால்

## சரியான நேரத்தில் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்

உங்கள் குழந்தைக்கு இரண்டு மாதம் முடியும் நேரம், ஆடியோலாஜிஸ்ட் உங்களது குழந்தைக்கு கேளுணர்வு மதிப்பீடு செய்ய சரியான நேரம் ஆகும். நீங்கள் இதற்கு முன்னதாகவே பரிசோதனை செய்ய விரும்பலாம். ஆனால் பரிசோதனை முடிவு கிடைப்பது சுலமானதாகவோ துல்லியமானதாகவோ இருக்காது. உங்கள் குழந்தைக்கான சந்திப்பு திட்டத்திற்கு ஏற்பாடு செய்ய நீங்கள் தொடர்பு கொள்ளப்படுவீர்கள் எனவே சரியான நேரத்தில் கேளுணர்வு மதிப்பீடு செய்து துல்லியமான முடிவை பெற இது உதவியாக இருக்கும்.

## காது கேளாமையின் அறிகுறிகளை கண்காணித்து வாருங்கள்

உங்கள் குழந்தையின் பேச்சு மொழி வளர்ச்சி குறித்து கவனம் செலுத்துதல் மிகவும் முக்கியம் ஆகும், ஏனெனில் பேச்சு மொழி வளர்ச்சி குறித்த குறைபாடுகள் காது கேளாமையின் அறிகுறிகளாக இருக்கலாம், எவற்றை எல்லாம் கவனிக்க வேண்டும் என்பதை பற்றி இந்த சிறு இதழின் வளர்ச்சியின் மைல்கற்கள் பகுதி உங்களுக்கு உதவும்.

## பிரதேசவாரியான சிசுக்களுக்கான செவிப்புலன் திட்டங்கள்

ஒன்ராறியோவில் சிசுக்களுக்கான செவிப்புலன் திட்டம் (Infant Hearing Program) கீழான சேவைகள் பிரதேசக் காரியாலயங்களின் மூலம் வழங்கப்படுகின்றன.

தொடர்பு கொள்வதற்கான தகவலினைப் பெறுவதற்கு தயவுசெய்து www.ontario.ca/infanthearing இணையத்தளம் சென்று பாருங்கள்.

To order by phone:
1-800-668-9938
TTY: 1-800-268-7095

Or visit: www.serviceontario.ca/publications
Publication # 019587

Learn more: www.ontario.ca/children

Nov/2014 © Queen's Printer for Ontario

TAMIL





# உங்கள் குழந்தைக்கு ஒரு கேளுணர்வு மதிப்பீடு தேவைப்படுகிறது

Ontario



## மறு பரிசோதனைக்காக சிபாரிசு செய்யப்படும் வகையில் உங்கள் குழந்தைக்கு கேளுணர்வு சோதனையின் முடிவு கிடைக்கிறது.

மறு பரிசோதனைக்காக சிபாரிசு செய்யப்பட்டால் உங்கள் குழந்தைக்கு கேளுணர்வு மதிப்பீடு தேவை என்று அர்த்தம். உங்கள் குழந்தை முற்றிலும் செவிடு என்றோ காது கேட்பதில் கஷ்டமாக உள்ளது என்றோ அர்த்தம் எதுவும் இல்லை.

மறு பரிசோதனைக்காக சிபாரிசு செய்யப்படும் பல குழந்தைக்கு கேளுணர்வு சாதாரணமாகவெ உள்ளது. சில சமயம் செவியின் கால்வாயில் உண்டாகும் அழுக்கினாலோ பரிசோதனையின் போது ஏற்படும் அசைவுகளாலோ மறு பரிசோதனைக்காக சிபாரிசு கிடைக்கலாம். இதை கண்டு பிடிக்க ஒரே வழி தலைசிறந்த ஆடியோலாஜிஸ்ட் மூலம் காது கேட்கும் மதிப்பீட்டு சோதனையை செய்து கொள்ளுவதாகும். உங்கள் மண்டல கைக்குழந்தை கேளுணர்வுத் திட்டம் உங்களுக்காக குழந்தைகளை பரிசோதிப்பதில் நிபுணரான தலைசிறந்த ஆடியோலாஜிஸ்டிடம் சந்திப்பு திட்டத்திற்கு ஏற்பாடு செய்வார்கள்.

குழந்தை பிறப்பின் போது, செய்யும் சோதனையை விட இந்த சோதனை உங்கள் குழந்தையின் கேளுணர்வு குறித்து அதிக தகவல்களை கண்டுபிடித்து தரும். இது அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளும், மற்றும் நீங்கள் ஒரு தடவைக்கு மேல் செல்ல வேண்டி இருக்கலாம்.

## கேளுணர்வு மதிப்பீடு

ஆடியோலாஜிஸ்ட் பல மாறுபட்ட சோதனைகளை செய்வார். ஒவ்வொரு சோதனையின் போதும் குழந்தையின் காதில் இயர்/போன் மெதுவாக வைக்கப்படும். ஒரு சோதனை செவிப்பறையின் அதிர்வை கணக்கிடும். மற்றொன்று ஒரு சிறிய மைக்ரோ போனை பயன்படுத்தி காதின் உள்பக்கம் ஏற்படும் ஒரு எதிரொலியை கண்டு பிடிக்கும். மிகவும் முக்கியமான சோதனை சிறிய குச்சி போன்ற எலெக்ட்ரோடுகளை பயன்படுத்தி அவற்றை முன்நெற்றியிலும் காதருகிலும் வைத்து உங்கள் குழந்தையின் மூளை அலைகளை அளந்து பரிசோதனை செய்வதாகும்.

இந்த எல்லாவித கேளுணர்வு சோதனைகளும் உங்கள் குழந்தைக்கு மிகவும் பத்திரமானது மற்றும் எந்தவித காயமோ தீங்கோ ஏற்படுத்தாது.

மதிப்பீடு முடிவடைந்ததும் ஆடியோலாஜிஸ்ட் உங்களிடம் சோதனை முடிவுகளை பற்றி பேசுவார். பெரும்பாலான குழந்தைகளின் கேளுணர்வு தன்மை சாதாரணமாக எல்லோரையும் போலவே இருக்கும். ஒரு வேளை உங்கள் குழந்தையின் கேளுணர்வில் குறைகள் இருப்பின் ஆடியோலாஜிஸ்ட் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் தேவையான உதவிகள் மற்றும் சேவைகள் கிடைக்கும் இடத்திற்கு அனுப்பி வைப்பார்.

# வளர்ச்சிக்கான மைல்கற்கள்

இந்த வளர்ச்சிக்கான மைல்கற்கள் இளம்பிள்ளைகளின் வளர்ச்சியினை அடையாளம் காணும் சில திறமைகளை அவர்கள் பேச்சுத் தொடர்பினை ஏற்படுத்த கற்கும் போதே அடையாளம் காணக்கூடியதாயிருக்கும் என தெரிவிக்கின்றது. உங்கள் பிள்ளை பேச்சு மற்றும் மொழி திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பதற்கான சில தகவல்களும் தரப்பட்டுள்ளது. உங்கள் பிள்ளை ஒன்று அல்லது அதற்கு மேலான அந்த மைல்கற்களை அடையவில்லை என்றால், தயவுசெய்து உங்கள் பகுதிக்கான சிறுபிள்ளைகள் பேச்சு மற்றும் மொழி திட்டத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.





## 6 மாதங்களில்

- ஒலி வரும் திசை நோக்கி திரும்புதல்
- திடீர் என, பெரிய ஒலிகள் கேட்டால் திடுக்கிடுதல்
- வேறுபட்ட தேவைகளுக்கு வித்தியாசமான வகையில் அழுதல் - எனக்கு பசிக்கிறது, எனக்கு களைப்பாக இருக்கிறது
- நீங்கள் பேசும்போது உங்கள் முகத்தை கவனித்தல்
- உங்களது புன்னகைகள் மற்றும் சிரிப்புகளுக்கு பிரதிபலிப்பாக புன்னகைத்தலும் சிரித்தலும்
- இருமல்கள் மற்றும் வேறு ஓசைகளையும் போன்று குரல் கொடுத்தல் - ஆ, ஏ, ப்பூ

## 9 மாதங்களில்

- அவன்/அவளது பெயரை அழைத்தால் அதற்கேற்ப இயங்குதல்
- தொலைபேசி மணி அடித்தால் அல்லது கதவு தட்டப்பட்டால் தகுந்த இயக்கம் காட்டுதல்
- "இல்லை" எனக்கூறினால் அதன் அர்த்தத்தை உணர்ந்துகொள்ளல்
- சைகைகள் காட்டியோ அல்லது ஓசைகளை எழுப்பியோ அவன் அல்லது அவள் தேவையானவற்றை பெற்றுக்கொள்ளல். உதாரணமாக, கைகளை நீட்டுதல் மூலம் தூக்கப்பண்ணுதல்
- உங்களுடன் சேர்ந்து விளையாடுதல். உதாரணமாக, கண்ணாமூச்சி
- மக்களுடன் சேர்ந்து இருக்க விரும்புதல் மழலை பேச்சும் திரும்பத் திரும்ப ஒலி எழுப்புதலும் - பாபாபாபா, டுடு

## 12 மாதங்களில்

- எளிமையான ஒற்றைச் சொல் வழிமுறையை பின்பற்றுதல் - "சிற் டவுன்"
- நீங்கள் சுட்டிக்காட்டும் எதையாவதை காண்பதன் பொருட்டு அறையின் குறுக்கே பார்வையை செலுத்துதல்
- மூன்று அல்லது மேற்பட்ட சொற்களை பாவித்தல்
- தொடர்பை ஏற்படுத்தும் பொருட்டு சைகைகளை பாவித்தல் - "ப்பாய் ப்பாய்" என கை அசைத்தல், "நோ" என்பதற்கு தலையை ஆட்டுதல்
- உங்கள் கண்களைப் பார்த்தவாறு ஓசைகள் சைகைகள் மற்றும் சுட்டிக்காட்டுதல் மூலம், உங்கள் கவனத்தை ஈர்த்தல்
- உங்களிடம் காட்டுவதற்காக விளையாட்டு பொருட்களை உங்களிடம் கொண்டு வருதல்
- கவனத்தை ஈர்ப்பதற்கும் மற்றும் புகழ்ச்சியை பெறுவதற்கும் "நடித்துக்காட்டுதல்"
- பேசுவதுபோன்று பலவித ஓசைகளை இணைத்தல் – அபாடா, ப்பாடு, ஆபீசு
- எளிதான படப்புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல்

## நீங்கள் பின்வருவனவற்றை செய்யும்போது குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்:

- உங்கள் முகத்தை அவர்கள் நன்கு பார்க்கக் கூடியதாக அவர்களுடைய மட்டத்திற்கு இறங்குங்கள். இதன் மூலம் அவர்கள் செய்வதிலும் சொல்வதிலும் நீங்கள் ஆர்வம் காட்டுகிறீர்கள் என்பது அவர்களுக்கு தெரிவிக்கப்படும். இது உங்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு எளிதாக அமையும்.
- அவர்கள் உருவாக்கும் ஒலிகளை திரும்பச் சொல்லுங்கள். குழந்தைகள் ஒலிகளை எழுப்புவதில் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள், மேலும் நீங்கள் அந்த ஒலிகளைப் போலவே திரும்ப திரும்ப சொல்வதை மிகவும் விரும்புவார்கள்
- குறிப்பாக அவர்களுக்கு உணவு ஊட்டுவது, குளிப்பாட்டுவது, உடை மாற்றுவது போன்ற நேரங்களில் நன்கு பாட்டுப்பாடி சிரியுங்கள். நாள் முழுவதும் நீங்கள் செய்யும் செயல்கள் குறித்தும் மற்றும் பார்ப்பவை குறித்தும் உங்கள் குழந்தையுடன் கதைக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வையுங்கள்: "அம்மா தனது மேல் சட்டையை போடுகிறாள்", "அது ஒரு பெரிய ற்ரக்".
- அவர்கள் பார்க்கும் மற்றும் விளையாடும் பொருட்களின் பெயர்களை அவர்களிடம் கூறவும். குழந்தைகள் புதிய பொருட்களை ஆராய்ந்து பார்க்கவும், அவற்றைப் பற்றி அறிந்து கொள்ளவும் மற்றும் அவற்றின் பெயர் என்ன என்பதை தெரிந்து கொள்ளவும் மிகவும் ஆர்வம் காட்டுவார்கள்.

## 18 மாதங்களில்

- "உள்ளே மற்றும் வெளியே", இறங்கு மற்றும் ஏறு" என்பவற்றின் அர்த்தத்தை புரிந்து கொள்ளுதல்
- கேட்கும்போது பல உடல் உறுப்புக்களை சுட்டிக்காட்டுதல்
- 20 செற்களையாவது உபயோகித்தல்
- "கரடி பொம்மை எங்கே?", "அது என்ன?" போன்ற எளிமையான கேள்விகளுக்கு சொற்களாலோ அல்லது சைகைகளினாலோ பதில் அளித்தல்
- பொம்மைகள் வைத்து பாவனைசெய்து விளையாடுதலை வெளிக்காட்டுதல் - கரடி பொம்மைக்கு குடிப்பதற்கு கொடுப்பது
- குறைந்தபட்சமாக நான்கு வேறுபட்ட மெய்எழுத்து ஒலிகளை எழுப்புதல் - க,த,ட,ப,ம, வ
- வாசித்துக்காட்டுவதையும் மற்றும் உங்களுடன் சேர்ந்து எளிமையான புத்தகங்கள் பார்ப்பதையும் விரும்புதல்
- ஒற்றை விரலைப் பாவித்து படங்களை சுட்டிக்காட்டுதல்

## 24 மாதங்களில்

- இரண்டு நிலைகொண்ட வழிமுறைகளை பின்பற்றுதல் - "உனது கரடி பொம்மையை தேடிஎடுத்து பாட்டியிடம் காண்பி"
- 100 அல்லது மேற்பட்ட சொற்களை உபயோகித்தல்
- இரண்டு பெயர் சொற்களையாவது உபயோகித்தல் - "நீ", "நான்", "எனது"
- சீராக இரண்டு அல்லது மேற்பட்ட சொற்களை சிறு சொற்றொடரில் இணைத்தல் - "அப்பா தொப்பி", "ரக் கீழே போகுது"
- மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்திருப்பதை விரும்புதல்
- சக பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பொருட்களை கொடுக்க ஆரம்பிப்பது மற்றும் மற்றப் பிள்ளைகளின் செயல்களையும் சொற்களையும் போன்று தாம் செய்தல்
- அவனது அல்லது அவளது சொற்களை 50 முதல் 60 சதவீதமான நேரங்களில் மக்களால் விளங்கிக் கொள்ள இயலும்
- சொற்களையும் ஒலிகளையும் எளிதாகவும் பிரயத்தனப் படாமலும் உருவாக்குவர்
- புத்தகங்களை சரியான முறையில் நேராகப் பிடித்து பக்கங்களை புரட்டுவர்
- பஞ்சு அடையப்பட்ட மிருகங்கள் மற்றும் பொம்மைகளுக்கு "வாசிப்பர்"
- கிரேயான்களை பாவித்து கிறுக்குவர்

## 30 மாதங்களில்

- பரிமாணங்கள் (பெரிய/சிறிய) மற்றும் அளவுகள் (சிறிதளவு, நிறைய, அதிகம்) பற்றிய எண்ணங்களை விளங்கிக் கொள்ளுதல்
- வயது வந்தவர்களின் இலக்கணப் பேச்சினை சிறிதளவு பயன்படுத்துவார் - "இரண்டு ஆப்பிள்கள்", "குருவி பறக்கிறது", "நான் பாய்ந்தேன்"
- 350 சொற்களுக்கும் அதிகமாக உபயோகித்தல்
- செயற்பாட்டு வினைச் சொற்களை உபயோகித்தல் – ஓடு, சிந்து, விழு
- சொற்கள் மற்றும் விளையாட்டு பொருட்களை உபயோகித்து, மற்றப் பிள்ளைகளுடன் முறை எடுத்து சிறிதளவு விளையாட ஆரம்பித்தல்
- மற்ற பிள்ளை காயப்பட்டு விட்டால் அல்லது சோகமாக இருந்தால் கவலையை வெளிப்படுத்தல்
- விளையாடும்போது பல செயற்பாடுகளை இணைத்தல் – பொம்மைக்கு உணவை ஊட்டி நித்திரையாக்குதல், சிறு கட்டைகளை இரயிலில் வைத்து இரயிலை ஓட்டிச் சென்று கட்டைகளை இறக்குதல்
- பெரும்பாலான சொற்களை ஆரம்பிக்கும் போது ஒலியை வெளிக்காட்டுதல்
- இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஒலி இசைவுகள் அல்லது பதங்கள் உடைய சொற்களை உருவாக்குதல் – "ப –னா –னா", "கொம் –ப்யூ –ற்டர்", "ஆ –ப்பிள்"
- சாதாரணமாக காணப்படும் குறியீட்டுச் சின்னங்கள் மற்றும் அடையாளச் சின்னங்கள் ஆகியவற்றை புரிந்து கொள்ளுவார் – நிறுத்து என்பதற்கான அடையாளம்
- நன்கு தெரிந்த கதைகளை நினைவில் கொள்வதும், விளங்கிக் கொள்வதும்

## நீங்கள் பின்வருவனவற்றை செய்யும்போது சிறுபிள்ளைகளுக்கு மிகவும் பிடிக்கும்:

- நீங்கள் புத்தகத்தில் படங்களைக் காட்டி பெயர்களை சொல்லும் போது அவர்கள் புத்தகங்களை தொடுவதற்கும் பிடித்துக் கொள்ளவும் அனுமதிக்கவும்.
- மழலைப் பேச்சு பேசுவதற்குப் பதிலாக உண்மையான சொற்களை உபயோகியுங்கள் – தாதா என்பதற்குப் பதிலாக "எனக்குத் தாருங்கள்" அல்லது அண்ணி என்பதற்குப் பதிலாக "தண்ணீர்".
- நேரம் எடுத்து அவர்கள் சொல்வதை கவனித்துக் கேளுங்கள். தங்களது புதிய சொற்கள், ஓசைகள் மற்றும் கருத்துக்கள் என்பவற்றை நீங்கள் கேட்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவார்கள்.
- எளிதான வழிமுறைகளை அவர்கள் பின்பற்றுவதற்கு கொடுக்கவும். "உனது சிவப்பு காலணிகளை சென்று தேடிப்பார்."
- அவர்களுடன் நீங்கள் பேசும்போது அதிகளவு வித்தியாசமான சொற்களை உபயோகிக்கவும் - மேல்/கீழ், உள்ளே/வெளியே போன்ற எதிர் சொற்கள், "ஓடுதல்", "சிதறுதல்" போன்ற வினைச் சொற்கள் மற்றும் "சந்தோஷம்", "பெரியது", "சிறியது", "சுத்தம்", "அழுக்கு" போன்ற விளக்கச் சொற்கள்.
- மற்ற பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவதற்கு ஊக்கப்படுத்தவும் – நூல் நிலையங்களில், விளையாட்டு குழுக்களில், பூங்காவில்.